கள்ளச்சாராய மரணம்: மேலும் ஒருவர் கைது!

தமிழ்நாடு அரசு நடவடிக்கை!

கள்ளக்குறிச்சி, ஜூன் 21-

கள்ளக்குறிச்சி கருணாபுரம் கோமுகி ஆற்றங்கரையில் அந்தப் பகுதியைச் சேர்ந்த கனகு மகன் கன்னுக்குட்டி (எ) கோவிந்தராஜ் (49), அவரது மனைவி விஜயா (42), கனகுவின் மற்றொரு மகன் தாமோதரன் (40) ஆகிய மூவரும் கள்ளச்சாராயம் விற்பனை செய்து வந்துள்ளனர். இவர்களிடம் செவ்வாய் மற்றும் புதன்கிழமை காலை பலர் கள்ளச்சாராயம் அருந்தியவர்களில் இதுவரை 34 பேர் இறந்துள்ளனர். 70க்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக கள்ளக்குறிச்சி காவல் ஆய்வாளர் ரு.ஆனந்தன் வழக்குப் பதிவு செய்து, கள்ளச்சாராய வியாபாரிகள் கன்னுக்குட்டி (எ) கோவிந்தராஜ், தாமோதரன் ஆகியோரை கைது செய்தனர்.

இந்த நிலையில், கோவிந்தராஜ் மனைவி விஜயாவை தனிப்படை போலீசார் கைது செய்துள்ளனர்.

தென்காசி வடக்கு மாவட்டம் மேல நீலிதநல்லூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா,40க்கு 40 நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி விழா மற்றும் வாக்காளர்களுக்கு நன்றி அறிவிப்பு ஆகிய முப்பெரும் விழா பொதுக்கூட்டம் குருக்கள்பட்டி கலைஞர் திடலில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள். உடன் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் எம்.பி.தங்கவேலு, பரமகுரு, பத்மநாதன், சரவணன், டாக்டர். செண்பக விநாயகம், முத்துச்செல்வி, பெரியதுரை, லாலா சங்கர பாண்டியன், உமா மகேஸ்வரி உள்பட கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

தென்மேற்குப் பருவமழை: பேரிடர் ஆயத்தப் பணிகள்!

தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, ஜூன் 21-

தென்மேற்குப் பருவமழை குறித்த பேரிடர் ஆயத்த பணிகள் தொடர்பாக தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தலைமையில் நேற்று (20.06.2024) தலைமைச் செயலகத்தில் தொடர்புடைய துறை உயர் அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூடுதல் தலைமைச் செயலாளர்/ வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் தென்மேற்குப் பருவமழை தொடர்பாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள பேரிடர் ஆயத்த நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட சென்னை மண்டல வானிலை ஆராய்ச்சி மையத்தின் தலைவர், இவ்வாண்டு தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் மழைப்பொழிவு இயல்பாக அல்லது இயல்பை விட சற்று கூடுதலாக இருக்கும் என்று தெரிவித்தார். குறுகிய காலத்தில் இடி மற்றும் மின்னலுடன் கூடிய கன மழை அவ்வப்போது ஏற்படும் என்றும் தெரிவித்தார். பின்னர் மற்ற துறைகளின் ஆயத்த நிலை குறித்து விவாதிக்கப்பட்டது.

பின்னர், பல்வேறு துறைகளின் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் ஒன்றிய அரசுத் துறை அலுவலர்கள், தென்மேற்குப் பருவமழையினை திறம்பட எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துரைத்தனர்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் அவர்கள் பின்வரும் அறிவுரைகளை வழங்கினார்கள்:

பேரிடர் காலங்களில், பிரத்யேகமாக மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தும் வகையில் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையினை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

காவல் துறையில், பேரிடர் மேலாண்மை பயிற்சி பெற்றுள்ள காவல் துறை அலுவலர்கள் கண்டறியப்பட்டு, பேரிடர் காலங்களில் அவர்களை மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பெருநகர சென்னை காவல் பிரிவில் பேரிடர் காலங்களில் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரணம் பணிகளை மேற்கொள்ள பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள பேரிடர் மீட்புப் படை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

பருவமழைக் காலத்தில் ஏற்படும் பேரிடர்களின் போது மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை காலதாமதமின்றி மேற்கொள்ளும் பொருட்டு, தேசிய பேரிடர் மீட்புப் படையினை தேவையான இடங்களில் முன்கூட்டியே நிலைநிறுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வெள்ள நீர் தேங்கும் நேர்வுகளில் பாதிப்பிற்குள்ளாகும் முக்கியம் வாய்ந்த உட்கட்டமைப்புகள் கண்டறியப்பட்டு அவற்றை பாதுகாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக மருத்துவமனைகளில் உள்ள ஜெனரேட்டர்களையும், மின்சார கட்டமைப்புகளையும் உயராமான இடத்தில் வைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பேரிடர்களால் பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில், நிவாரணப் பணிகளுக்காகவும் மற்றும் பொது மக்களுக்கு தங்கு தடையின்றி பெட்ரோல் / டீசல் கிடைக்கப் பெறும் வகையில், வாகனங்கள் மூலம் எரிபொருள் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.

அதே போன்று, பேரிடர் காலங்களில் தடையில்லா செல்பேசி இணைப்பை ஏற்படுத்த செல்பேசி கோபுரங்களுடனான வாகனங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

பேரிடர்களை திறம்பட எதிர்கொள்ள அனைத்துத் துறைகளும் ஒரு நிலையான வழிகாட்டு நடைமுறையினை தயார் செய்து வெளியிட வேண்டும். அதே போன்று, பாதிப்பிற்குள்ளாகும் பலதரப்பட்ட மக்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட பேரிடர் எச்சரிக்கையினை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பேரிடர் காலங்களில் ஒவ்வொரு துறையினரும் அவரவர் துறை சார்ந்த பயனர்களுக்கு வழங்க வேண்டிய தாக்கம் சார்ந்த முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகள் குறித்து நிலையான வழிகாட்டு நடைமுறையினை வெளியிட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் கடந்த காலத்தில் ஏற்பட்ட பேரிடர் அனுபவங்களை கருத்தில் கொண்டு, மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து பகுதிகளிலும், தன்னார்வலர்களைக் கண்டறிந்து, அவர்களை பேரிடர் காலங்களில் ஈடுபடுத்தும் வகையில், உரிய பயிற்சி அளித்து தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் பல்வேறு துறை செயலாளர்கள், சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்கள், காவல் துறை, இராணுவம், விமானப்படை, கப்பற்படை, கடலோர காவல் படை, இந்திய வானிலை ஆய்வு மையம், மத்திய நீர்வள ஆணையம், தேசிய பேரிடர் மீட்புபடை, உள்ளிட்ட ஒன்றிய அரசுத் துறை அலுவலர்களும், தொலைத்தொடர்பு துறை, எண்ணெய் நிறுவனங்களின் அலுவலர்களும் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை மேற்கு மாவட்டம்

மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட அண்ணாநகர் தெற்கு, அண்ணாநகர் வடக்கு ஆகிய பகுதிகளில் தயாநிதி மாறன் எம்.பி. வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றார்!

மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்டம். மத்திய சென்னை நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட அண்ணாநகர் தெற்கு. அண்ணாநகர் வடக்கு ஆகிய பகுதிகளில் இன்று 21-06-2024 (வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணி முதல் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் இந்நிகழ்ச்சி சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு (எனது) தலைமையில் நடைபெறுகிறது. நன்றி தெரிவிக்கும் பகுதிகளுக்குட்பட்ட தெருக்கள் விவரம் பின்வருமாறு:

அண்ணாநகர் வடக்கு பகுதி

நேரம்	வட்டம்	தெருக்களின் பெயர்கள்
மாலை 4.00 மணி முதல்	100	முத்து சோலை தெரு, திருவீதி அம்மன் கோவில் தெரு, கும்மாளம்மன் கோவில் தெரு, வள்ளியம்மாள் தெரு, உமையாள் தெரு, தியாகப்பா தெரு, அழகப்பா நகர்
	100அ	ஆல்ஸ் ரோடு, டி.பி.சத்திரம் 7வது தெரு, 10வது தெரு, டி.பி.சத்திரம் 1வது பிரதான சாலை, கே.வி.என்.புரம் 4வது தெரு வழியாக ஜோதியம்மாள் நகர், கே.வி.என்.புரம் 2வது தெரு அம்பேத்கர் சிலை
	101	மண்டபம் 3வது குறுக்கு தெரு, குஜ்ஜி ரோடு ஜி பிளாக், காந்தி ரோடு, வ.உ.சி. நகர், ஆர்.வி.நகர், ஆர்.வி.நகர் மெயின் ரோடு, கீழ்ப்பாக்கம் கார்டன் சாலை
	101அ	திருவீதி அம்மன் கோவில் தெரு, மஞ்ச கொல்லை
	102	பாரதிபுரம், கெஜலட்சுமி காலனி, பெரியகூடல், பெரிவரி சாலை
	102அ	சத்யா நகர், அம்பேத்கர் நகர்
	103	என்.எஸ்.கே.நகர்
	103அ	நடுவாங்கரை, எம்.ஜி.ஆர்.காலனி, நியூ காலனி

அண்ணாநகர் தெற்கு பகுதி

நேரம்	வட்டம்	தெருக்களின் பெயர்கள்
மாலை 6.00 மணி முதல்	105	அரும்பாக்கம் திருவீதியம்மன் கோவில் தெரு துவக்கம், வள்ளுவர் சாலை, இந்திரா காந்தி தெரு, சக்தி நகர், மாரியம்மன் கோயில் தெரு வழி
	105அ	அசோகா நகர், திருவள்ளுவர் நகர், கண்ணகி தெரு, கல்கி நகர், இராணி அண்ணாநகர், வாட்டர் டேங்க் ரோடு வழியாக எம்.எம்.டி.ஏ. காலனி மெயின் ரோடு, விநாயகபுரம் முதல் தெரு, அன்னை சத்தியா நகர் மெயின் ரோடு, திருக்குமரபுரம் மெயின் ரோடு வழியாக 100 அடி ரோடு
	106	பெரியார் பாதை (அமிர்தவள்ளி திருமண மண்டபம் அருகில்), வள்ளலார் தெரு, பத்மநாப நகர் மெயின் ரோடு
	106அ	பத்மநாப நகர், தமிழர் வீதி சந்திப்பு, கோ.சு.மணி தெரு, இந்திரா காந்தி தெரு, இளங்கோ அடிகள் தெரு, பெரியார் பாதை மெயின் ரோடு, அண்ணா நெடும்பாதை
	107	ஆசாத் நகர் நடுப்பாலம் வழி, கலக்ட்ரேட் காலனி 4வது குறுக்கு தெரு, ரயில்வே காலனி 3வது தெரு, வின்செண்ட் பள்ளி வழியாக நெல்சன் மாணிக்கம் ரோடு மேத்தா நகர் மெயின் ரோடு, மேத்தாநகர் பாலம் வழி சுப்புராயன் தெரு, அமைந்தகரை யாதவாள் தெரு, கிழக்கு மாட தெரு, வெள்ளாள தெரு, அமைந்தகரை பெருமாள் கோயில் தெரு
	107அ	முத்துலாண்டி காலனி 1வது மெயின் ரோடு, பிள்ளையார் கோயில் தெரு வழியாக (சின்ன சந்து)

ஆகவே மேற்குறிப்பிட்ட அட்டவணைப்படி நன்றி அறிவிப்பு நிகழ்வு நடைபெறுகிறது. ஆகையால் அந்தந்த பகுதிக்குட்பட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர், பகுதி செயலாளர், மாவட்ட / மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட/பகுதி/வட்ட அமைப்பாளர், தலைவர், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பகுதி/வட்டக் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நே.சிற்றரசு

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், 16வது வட்டம் கன்னியம்மன் பேட்டை சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு, மாவட்ட பிரதிநிதி நா.மோகன் குமார் நாகூரார் ஏற்பாட்டில் கல்வி உபகரணங்களை, வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் தலைமையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் வழங்கினார். உடன் கவுன்சிலர் ஆ.ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதிகள் பா.சந்திரன், பி.தரணி, வட்டத் துணைச் செயலாளர் வக்கீல் இ.வெங்கடேசன், சி. முத்தையா, வக்கீல் சுரேந்தர், முருகன், உள்ளிட்ட பலர் உள்ளனர்.

நா. மோகன் குமார் நாகூரார் ஏற்பாட்டில் இ. கண்ணப்பன் தலைமையில்

மாதவரம் 16வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் - புழல் எம். நாராயணன் வழங்கினார்!

சென்னை, ஜூன் 21-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, மற்றும் 16 வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வார்டு வாரியாக தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மாதவரம் வடக்கு பகுதி 16 வது வட்டம் கன்னியம்மன் பேட்டை பகுதியில் அமைந்துள்ள, சென்னை மாநகராட்சி துவக்கப்பள்ளியில் சுமார் 100க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர்.

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட பிரதிநிதி நா மோகன் குமார் நாகூரார் ஏற்பாட்டில் நோட்புக், பென்சில், பேனா, ஜாமென்ட்ரி பாக்ஸ், ஆகியவற்றுடன் இனிப்பு லட்டு வழங்கும் விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

16வது வட்ட செயலாளர் இ. கண்ணப்பன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், பகுதி நிர்வாகிகள் துணை செயலாளர் க, மாவட்ட பிரதிநிதிகள் ,பா. சந்திரன், பி.தரணி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் கருணாகரன்,வட்ட நிர்வாகிகள் இ. அருள், ரமேஷ், சி. முத்தையா, புவனேஸ்வரி மகேஷ் குமார்,வி. மாரி, பாக முகவர் தமிழரசு கிருபாகரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், குளக்கரை மஞ்சுநாதன், எலந்தனூர் சிவப்பிரகாஷ், மகேஷ் குமார், கடப்பாக்கம் சாம்ராஜ், பர்மா நகர் முருகன், வக்கீல் சுரேந்தர், சடையங்குப்பம் சுரேந்திரன், ஆர்.விஜய் ஆனந்த், குமார், நந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் பணியாற்றிட

கழகத் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் - ஒருங்கிணைப்பாளர்கள் நியமனம்!

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

DMK IT WING

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேரதல் பணியில் தலைமைக் கழகத்தால் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் பணிக்குழுவுடன் இணைந்து கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பில் கீழ்க்காணும் நிர்வாகிகள் ஒருங்கிணைப்பாளர்களாகப் பணியாற்றுவார்கள்.

தகவல் தொழில்நுட்ப அணி விக்கிரவாண்டி இடைத்தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள்

வ.எண்	ஒன்றியம் / பேரூர்	தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள்
1	விக்கிரவாண்டி தொகுதி	திரு. அ.தமிழ்மாறன் மாநிலத் துணை செயலாளர்
2	கானை மத்தியம் ஒன்றியம்	திரு. AK தருண் மாநிலத் துணை செயலாளர்
3	கானை வடக்கு ஒன்றியம்	திரு. AK தருண் மாநிலத் துணை செயலாளர்
4	கானை தெற்கு ஒன்றியம்	திரு. AK தருண் மாநிலத் துணை செயலாளர்
5	விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம்	திரு. SD.இசை மாநிலத் துணை செயலாளர்
6	விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம்	திரு. SD.இசை மாநிலத் துணை செயலாளர்
7	விக்கிரவாண்டி மத்தியம் ஒன்றியம்	திரு. SD.இசை மாநிலத் துணை செயலாளர்
8	கோலியனூர் மேற்கு ஒன்றியம்	திரு. விஜயகதிரவன் மாநிலத் துணை செயலாளர் திரு.ஸ்ரீதர் மண்டல பொறுப்பாளர்
9	விக்கிரவாண்டி பேரூர்	திரு. மதுரை எஸ்.பாலா மாநிலத் துணை செயலாளர்

வார் ரூம் மற்றும் தலைமை கழகத் தொடர்பு: திரு. அழகிரி சதாசிவம் மாநிலத் துணை செயலாளர்
மகளிர் ஒருங்கிணைப்பு : திருமதி.பத்மப்பிரியா மாநிலத் துணை செயலாளர்
சமூக வலைத்தள ஒருங்கிணைப்பு : திரு. MK.சிவா மாநிலத் துணை செயலாளர்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை
நாள்- 20.06.2024

முனைவர் டி.ஆர்.பி.ராஜா
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எல். பலராமன்

ஜூன் 21 (2020)

தனது இளம் வயதிலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்

வடசென்னை மாவட்டத்தில் வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர் என படிப்படியாக உயர்ந்து மாவட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் ஆட்சியில் இருந்தபோதும் – எதிர்க்கட்சியாக இருந்தபோதும், வடசென்னையில் கழகம் வளர பாடுபட்டவர். வடசென்னையில் முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் ஆகியோர்களை கொண்டு பல பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் சிறப்பாக நடத்திக் காட்டியவர்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினராக பணியாற்றியதுடன், மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக பணியாற்றியவர்.

"இவர் பலராமன் அல்ல; 'பலே ராமன்' என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்கள் – ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து நடத்திக் காட்டியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"கழகப் பணிகள் அனைத்தையும் அமைதியாக, அவர் என்ன மாதிரிப் பணியாற்றுகிறார் என்றே தெரியாத அளவுக்கு அடக்கமாக ஆற்றுவதோடு, அவை அனைத்தையும் நடத்தி முடிப்பார்." என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.